சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: 1889 விரோதி ஞு ஆவணி ௴ 26-ஆம் உ

உ
சிவமயம்

இலங்கையிற் செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. பதிவு இல - 2

# இந்து சாதனம்

சிவமயம்

பிரதி விலை ரூபா 1-00

卐 Hindu Organ 卐

புத் - 99, 100 | யாழ்ப்பாணம்:- விபவ ஞு மாசி ௴ 13 ( 24 - 02 - 1939 ) [ இல - 32

வழி காட்டிச்
சைவநெறிகூட்டி
வாழ்ந்த பூட்டி

# புண்ணிய நாச்சியார்

## கொடுத்தகரத்தைத் தோடுத்து வழுத்துவோம்

இப்படியும் வாழ்ந்தார்கள் எங்கள் முன் சென்ற பரோபகாரப் பெண்ணரசிகள் என்று இன்றைய சமுதாயத்துக்கு எடுத்துக் காட்டும் பிராட்டியார் புண்ணியநாச்சி அம்மையார்.

பசித்து வந்தே ஏற்குமவர்க்கு இட எண்ணில் எங்கேனும் எழுந்து விலகிக்கொள்ளும் அவர்களுக்கு அறிவு புகட்டும் வகையிலே இந் நாட்டிலே ஒரு பெண்மணி தனது வாழ்க்கை வளப் பொருட்களை இறைவனுக்கும், இறை அடியார்களுக்கும் ஆலயங்கள் அறம் பயில் மன்றங்கள் ஆகியவற்றின் மூலம் உபகரித்த பெரியவ புண்ணியநாச்சி அம்மையார். இத்த கைய கொடைகள் அந்த நாட்களில் கிரமமாக நிகழ்ந்தன. என்பதற்குத் திருத்தலங்களுக்குரிய கிலங்கள்பல தருமசாதனங்களாலானவை என்ற சான்றுகள் உள.

ஆவிற்கு ஒரு பச்சிலை, அன்னதானமாக ஒரு பிடி சோறு, பெரும் புண்ணியம் என்று திருமூலர் மந்திரோபதேசம் செய்திருக்கின்றார்.

எனவே புண்ணியநாச்சி அம்மையாரின் தருமங்கள் எங்கள் எல்லோருக்கும் புத்திபுகட்டும் வகையில் அமைந்துள்ளன. அந்த அம்மையாரின் தினத்தைத் தேவார பாராயணத்துடன் சில நாழிகைப் பொழுது சிவ சிந்தனையிற் செலுத்தவது நல்லதொரு நிகழ்ச்சியாகும். என்று இந்து சாதன ஆசிரியர் நம. சிவப்பிர



### ஞானவைரவர் கோவில்

(யாழ்/ இந்துக்கல்லூரி)

○●○

புநராவர்த்தன கும்பாபிஷேகம்
இந்துக்கல்லூரியின்
நூற்றாண்டுவிழா நிகழ்ச்சிகளில் ஒன்றாக
(22/3/1989 திகதி)
விபவ, பங்குனி உத்தரம்
பூரணை புதன்கிழமை
வேதாசிவாகம நெறிப்படி நடைபெறும்

இதற்கான முயற்சிகள் இப்பொழுது நடைபெறுகின்றன.

கும்பாபிஷேகக் கட்டிட விசேடநிதிக்காக ஒரு அதிர்ஷ்ட இலாபச்சீட்டும் சைவாபிமானி

( வளர்ச்சி 4 ஆம் பக்கம் )

காசம் அவர்கள் தமது உரையிற் கூறினர்.

### சைவபரிபாலனசபையின் பெரும் பணி

புண்ணியவதி புண்ணிய நாச்சி அம்மையாரின் தருமங்களைச் சைவ பரிபாலன சபை கை ஏற்றுப் பரிபாலனம் செய்து வருவது இச் சபையின் நூற்றாண்டுக் காலத்தில் மீண்டும் மீண்டும் நினைவு கூரப்பட வேண்டிய தொன்றாகும்.

மாசித்திங்களில் வரும் இந்த மாதரசியின் நினைவு நாளைச் சபையார் மிகக் கிரமமாகப் பக்தியுடன் அன்ன தானம் என்னும் மாகேசுரபூசை மூலமும் சபை நாவலராச்சிரமத்தில் வழிபாட்டின் மூலமும் அறிஞர்கள் சொற் பெருக்கு வாயிலாகவும் தவறாது செய்து வருகின்றது என்றனர் சபைத் தலைவர் சிவ. இராசேந்திரம் அவர்கள்

வண்ணை வைத்தீஸ்வரப் பெருமானுக்கும் தையல் நாயகி அம்மையாருக்கும் வழிபாடு நெறியாக நிகழ்ந்த பின் நண்பகல் திருநெல்வேலி சைவ சிறுவர் இல்லத்திலே மாகேசுர பூசை பண்பாக நடைபெற்றது. ஆங்குள்ள அநாதர் புண்ணியநாச்சி அம்மையார் அறம் அளித்த அன்னத்தினை உண்டு புண்ணிய உணர்ச்சி பெற வாய்ப்புப் பெற்றனர்.

### ஆச்சிரம மண்டபத்தில் ஆராதனையும் ஆய்வும்

மாலை நிகழ்ச்சியாகச் சைவ பரிபாலன சபை நாவலர் மண்டபத்திலே விசேட பூசையின் பின் தேவார பாராயணத்தைத்

( வளர்ச்சி 4 ஆம் பக்கம் )

## நூல் வளத்தால் மேல் வளர்ந்த யாழ் நாட்டில் ஒரு பிரதியும் இல்லாத வறுமை உருவானதே!

கண்ணீர் பொழிந்தபடி கதை சொன்னார் பண்டிதர் கதிரிப்பிள்ளை அவர்களின் உத்தம புத்திரன் கலைமாமணி உமாமகேசுவரன்.

செவிமடுத்துக் கொண்டிருந்த எமக்கும் விழிகள் நீரால் விம்மின.

அரிய கலைக்களஞ்சியத்தோடு அதிவிசேடத்துக்குரிய பழைய பெரு நூல்கள் யாவும் அசம்பாவிதத்தில் எழுந்த அக்கினி யாகத்தில் அழிந்தொழிந்து விட்டன! அபிப்பாகமும் இல்லையே!

இனி எங்கே இவற்றைத் தேடி இதயத்துக்கு அமைதி விளைவிப்பது என்றார் அந்தப் பண்டிதர் ஆசிரியர்.

வறுமைக்கும் ஒரு வரம்புண்டு; ஆனல் யாழ் நாட்டில் ஊழித்தீப்போல எழுந்த பேரழிவினுல் விளைந்த வறுமைக் கோகட்டுப்படுத்தும் கோடில்லையே.

வீடுபோனது, ஆடுமாடும் அங்ஙனே, உடை கிடையாது. உறங்க ஒலைப்பாயுமில்லை என்றால் படிக்கப் புத்தகமும் இடைப்பதரிதான நிலை எம்மை இடிப்பதா?

நினைத்து நினைத்து நின்றால் அனைத்தும் அதோகதியே.

என்றாலும் வழுக்கிவிழினும் திருப்பெயர் மனத்தில் உருப்படியானுல் வாழுவழி காணலாம் அல்லவா!

இனி ஒரு விதி எடுத்துரைப்போம்.
வண்டமிழ் நாட்டில் வாழ் மனிதர்காள்!
வம்மின், வந்தவறுமையைக் கண்முன் கதியைக் காண்மின்.
எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் அன்றோ!

ஊர் ஊராகப் போமின்; வீடு வீடாகச் செல்மின். எஞ்சியிருக்கும் நூல்களை ஏடுகளை இரந்து கேட்டு எடுமின், இவ்வாறு பெறப்படுவன எங்கள் மூலதனமாக இருக்கட்டும்.

(வளர்ச்சி 3- ஆம் பக்கம் )

## மன்னவர்க்கு அன்னை மொழிக் கோவை வழங்கிய மறையாளர்

### வேந்தர் நிதியுடன் கங்கைவேணியனுக்கு மேவினர் தானங்கள்.

திருக்கடவூர் சோழ நாட்டில் இருக்கும் திருத்தகும் ஊர். ஆங்குதித்த அந்தணர் காரியார் அருந்தமிழ் பயின்று அறிந்தவற்றைக் கோவை செய்து முடியுடைவேந்தர் மூவருக்கும் பயிற்று வித்த பேரறிஞர்.

அரசர்கள் அளித்த நிதிக் குவையைக் கொண்டு அறஞ் செய்தார் இந்த அந்தணர் அடியார். சிவதருமசேவையிலே திகழ்ந்தனர்.

செஞ்சடையண்ணலின் அருள் பெற்ற செஞ்சொற் புலவர் காரியாருக்கு அத்தொடர்பினுல் வாய்ந்தமனம் போல

வளர்ச்சி 3 ஆம் பக்கம்

## நல்லைக்குரவர் நாமம் - நன்மை பயக்கும்

— இறை - ஒளி —

( சந்தக் கவி )

(வள்ளிக் கணவன் பேரை வழிப்போக்கர் சொன்னாலும் என்ற வகையில்)

நல்லைக் குரவர் நாமம் நமக்கோர்
கனவா ஆனாலும்.
நன்மை பயக்குமடா தமிழா
தீமை விலக்குமடா.
நாடுமொழி நாட்டார் எல்லாம்
கேடு துயர் வாட்டா துய்வர்
நீடு தமிழ் சைவ மோங்கும் தமிழா
ஆடுமரன் பாதம் தாங்கும் தமிழா.

### காலநிலை - ஓலநிலை

கோடையோ கோடை குளிரோ குளிரென்றுற்
பீடையோ பீடை பெருமச்சம்! - ஓடையோ
காணுது வாடும்நாற் காலவிலங்கு! வாழ்க்கைசீர்
பேணுது குன்றுமன் பே.

### தமிழகத்தில் அந்தச் சட்டசபை = மீண்டும் கூட்டப்படும்.

சென்ற தமிழக அரசால்வேண்டியதில்லை எனக் குலைக்கப்பட்ட சட்டசபை இப்பொழுதுள்ள தமிழக அரசால் மீண்டும் நிறுவப்படத்தீர்மானம் செய்யப்பட்டிருக்கின்றது.

அன்றைய சட்ட சபையின் தலைவராகச் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் பணியாற்றியது தெரிந்ததே.

★ தேவர்க்கும் இனிதாம் ஆவின் பாலமுதம் ★

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர்தீக்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

விபவ ஞூ மாசி மீ 13 ட 24 — 02 — 89


## ஊர் எனப்படுவது உணர்ந்தோர் மாட்டே

ஊ நக்கு உழைப்பதாக ஒவ்வொருவ ந' உவகையுடன் சொல்லி வருகின்றனர். உழைத்துப் பெருமைப்படுகின்றனர். அவ்வளவில் அந்த உள்ளப் போக்கு நல்லது. ஊரை ஒருவகையில் உள்ளத்திலே கொள்வது உத்தம நெறிதான்.

இந்த உரைகள் எண்ணுக்கடங்காதிருந்தும் அந்த ஊரோ எந்த விதத்திலும் முன்னேறவில்லை. அப்படியுமில்லை, இருந்த நிலையிலும் இருந்து மேலும் சீர்குன்றி விடுகின்றதோ என்று திருவாளர் ஊரவர் செப்புகின்றுரே!

ஊன்றி இந்த விடயத்தை உற்று நோக்கிஞல் உண்மை புலப்படுகின்றது.

ஊர் என்றுல் ஒன்றுபட்ட பலபேர் என்பது பொருள்: திரண்டு மக்கள் சேரும் பொழுது அத்திரட்சியைத் தான் ஊர் என்பது வழக்கம்; திரட்சி இதனைச் சமுதாயம் என்றும் சொல்வர்.

ஆஞல் இந்த ஊர் என்ற பேர் பெற்ற பெரும் நிலத்தில் உள்ளவர்கள் ஒரே கருத்துடையவர்களா என்று ஒரு கேள்வியும் உருவாகின்றது

கருத்து ஒருமித்தல் என்பது காதலர்களுக்குள்ளும் இருக்காதென்ற கருத்திலே புலவர் ''கருத்தொருமித்து வாழ்தல்'' என்ற கொள்கையைக் குறிப்பாக எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

எனவே வேற்றுமை இயல்பாக உண்டு மனித சமூகத்தில் என்பதை மறுக்கமுடியாது.

இந்த ஒவ்வாமைக்கு என்ன காரணம் என்று பார்த்தால், வந்து தோற்றுகின்றது ''சுயநலம்''

**தன்னை மட்டும் தான் எண்ணுவதா**

தன்னை நினைப்பது மானுடன் தன்மை தான் ஆஞல் அவன் தன்னை மட்டுமே எண்ணியபடி மற்றையோரை மறந்து விடுதல் என்றுல் அந்த நிலை எத்தகையது.

எவ்வாறு தனி மனிதன் ஒருவன் தான் நல்ல வண்ணம் வாழ வேண்டும் என்று எண்ணுகின்றுனே அவ்வாறே அயலவனும் அனைவரும் செறிந்து விட வேண்டும் என்றல்லவோ அவன் நினைக்க வேண்டும்.

காற்று, நீர், வெப்பம் மற்றும் இயற்கைப் பொருட்கள் யாவும் எல்லோருக்கும் பொதுவானவை. இவற்றைப் பயன்படுத்தி மனிதன் வாழலாம். அங்ஙனம் வாழ்க்கையை அமைக்கும் பொழுது ஒருவருக்கொருவர் பொருத வேண்டியதில்லையே. இன்னும் ஒற்றுமைப் பட்டால் நன்மையும் ஆகுமன்றே,

வாரம் என்ற தமிழ்ச் சொல்லொன்று ஊரில் முற்காலத்தில் பெரு வழக்குடையதாயிருந்தது. எத்தனையோ வெவ்வேறு கருத்துக்கள் உடைய இந்தச் சொல் பங்கு என்ற பொருளிலும் வருவது. வாரத்துக்குத் தொழில் செய்யும் முறை அன்று நிலவியது. ஒருவருக்கொருவர் வயல், தோட்டம், வளவு வேலைகளிலே எல்லோரும் சேர்ந்துழைப்பது தான் இந்த முறை. இதிலே இலாபம் பங்குவீதம் ஆகும். அல்லது தொழில் உதவிக்குத் தக்கதாகும். தொழிலாளர் பற்றுக்குறை இல்லை; அயலும் அயலும் சேர்ந்து வயலில் வியர்வை சிந்துவர், ஆஞல் தொழிலாளர் இல்லையே என்று கலங்க வேண்டிய நிலை இராது.

இது தான் ஊரென்பது உணர்ந்தோர் மாட்டே எனலாம். இலக்கியத்தில் உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே என்றனர். ஊரிலே ஒருவருக்கொருவர் ஆதரவாகக் கூட்டுறவு காட்டிஞல் உயர்வு உணர்ச்சியைப் பு குறிக்கும் அல்லவா?

இவ்வகையிலே தான் கூட்டுறவுக் கொள்கையும் உண்டு. உண்மையான கூட்டுறவாளர்களாக ஊரவர்கள் இருந்தால் அவர்கள் உயர்ந்தவர்கள் ஆவர. அவ்வூர் எவ்வளவோ முன்னேற்ற மானது செவ்விதானது. சீர்கூடும். ஒரு பொழுதும் சீர்குலைந்து போகாது.

# இலிங்கமேஎல்லாம் ஈடிலா இன்பம்

( முன் வளர்ச்சி - 2 )

சூத முனிவரின் வாய் உரைகளைக் கேட்ட நைமி சாரணிய வாசிகள் பக்தியோடும் கேட்டு, சிவபெருமானின் கிருபாவேஷத்தையும். அவருடைய ஆநந்த நடனங்களையும், நினைந்து நினைந்து பேரின்ப வாரிதியில் மூழ்கி, அப்பரமன் மகத்துவங்களைப் புகழ்ந்து பாடிச் செம்மேனி அம்மானின் திருவடியைச் சூழ்ந்தனர் என்பது, சிவபுராண மகிமை.

வேதங்கள் கூறுகின்ற தன்மையினராகிய சுத்தசிவம், பராசக்தியுடன் ஒன்ருய் அமர்ந்து ஐந்தொழிற்கும் காரணமாகி ஆன்மாக்களின் தியானத்திற்கு நிமித்தமாய், திருக்கோலங் கொண்ட பரம ஏகாந்த நிலயமே சிவலிங்கம், என்று சொல்லப்படும். அதுவே சிவம் எனும் நாமம் தமக்கேயுரிய செம்மேனி அம்மாள் என்று பெறப்படுதல் காண்க. அடுத்து வரும் இலிங்கத்தின் தோற்றங்களைப் பின் தருதும்.

இலிங்கத்தின் ஆசனம் சக்தியையும், இலிங்கம் சிவத்தையும் குறிப்பனவாகும். ஆதலின் சக்தியும் சிவமும் கலந்திருப்பதே, சிவபெருமானது நிட்கள சகலத் திருமேனியாகும். பிரபஞ்ச சிருஷ்டியைப் பஞ்ச கிருத்தியங்களாகச் செய்யும் ஈசுர

அளவை ஊர் வித்துவான்
சி. நா. கணேசபண்டிதன்

பிரபாவம் இலிங்கமூர்த்திக்கு உரியவையாகும், இவ்விலிங்கம் வியக்தம் வயத்த வ்யக்தம், அவ்வயக்தம் என மூவகையாகும். அவையுள் வியக்தம் சகல வடிவத்தையும் வயத்தாவ்யக்தம் நிட்கள வடிவத்தையும் அவ்வயக்தம் சுத்த நிட்கள வடிவினையும் விளக்குவனவாகும். இதனுற் சர்வ சகத்திற்கும் மூலகாரணமாய் இலிங்கம் விளங்குகின்றதென்பது வேதங்களின்கூற்றுகும். ஆகவே இலிங்க வடிவினராகிய சிவபெருமானே எல்லாவற்றிற்கும் மேலானவர்.

சிவத்துடன் சக்தி சேரும் பொழுது எத்தொழிலும் இயங்கும் என்பதை சிவமெனும் பொருளும் ஆதி சக்தியொடு சேரின் எத்தொழிலும் வல்லதாம். அவள் பிரிந்திடில் இயங்குதற்கும் அரிது அரிது என்று சௌந்தர்யலகரி கூறுகின்றது.

சக்தி சிவமாம் இலிங்கமே தாபரங்
சக்தி சிவமாம் இலிங்கமே சங்கமஞ்
சக்தி சிவமாம் இலிங்கமே சதாசிவம்
சக்தி சிவமாம் தாபரம் தானே.

என்ருர் திருமூலர்.

அணுவிலும் சிறியதாகிய ஆலம்வித்து அகண்ட பெரு விருட்சமாகிய ஆலமரத்தைத் தன்னுள் அடக்கியது போல, சிவமும் பிரபஞ்சமும் ஒன்ருய் இருப்பதை உலகம் உணர வேண்டும்

இலிங்கத்தின் விருத்தம் உருத்திர பாகமாகும். பீடத்தின் அடி நான்கு மூலையும் பிரமபாகமாகும். நடுவின் எட்டு மூலையும், விஷ்ணு பாகமாகும். இதுவே பிரணவ சொரூபமாகும். பிரணவத்தின் ஒலி ஓங்காரமாகும். இதன் மூல எழுத்தாகிய அட்சரங்கள் அகர உகர மகரங்களாகும். இம் மூன்று அட்சரங்களும் முத்தொழிலை விளக்குகின்ற மும்மூர்த்திகள் மயமாகும். ஆகவே அ உ ம என்ற எழுத்துக்கள் ஓம் என்ற நாத ஒலி

( வளர்ச்சி 3 ஆம் பக்கம்)

உ
கீரிமலை நகுலேசர் - பெருந்திருவிழா.
கொடிஏற்றம். இன்று
மாசிமகம் - திருக்கோணேசர் கொடிஏற்றம்
வண்ணை வைத்தீஸ்வரர் 5 - 3 - 89
கொடிஏற்றம்


உ
''நாவலர் நமக்கு நயந்த நன்னெறி''

# சைவ வினுவிடை

முதலாம் புத்தகம்

இலக்கிய வரலாற்றில் இன்று நோக்கிஞல் அன்று ஆறுமுகநாவலர் அவர்கள் விஞவிடையாகச் சைவ சமய அறிவு புகட்ட வகுத்த முதற் புத்தகம் இந்தப் பேரறிஞன் சைவ உலகிற்கு ஆற்றிய பணியைப் புலப்படுத்தும்.

புறமதத்தினர் உட்புகுந்து சைவப் பச்சிளங் குழந்தைகளையும் புரண்டுதம்மிடம் அணையச்சுரண்டின சூழ்ச்சிக்கு மறுப்பாக நாவலர் ஐயா தொடுத்த முதலாவது நடவடிக்கை தான்.

## சைவ விஞவிடை

முதலாம் புத்தகம்

இன்று

மாணக்கர், ஆசிரியர், மற்றும் பெற்றோர்
சைவ சமய எழுச்சி நிலையங்கள்,
ஆலயங்கள் எங்கும் இந்நூல்
எந்நாளும் இருக்க வேண்டும்.

விலை ரூபா; ( 7.75 )

இக்கால நாணயப் பரிமாறலில் இத் தொகையும் ஒரு தொகையாகாதே!


முன்னோர் இட்டவித்து முளைத்து விரிந்து இந்நாள் ஈழத்தில் எல்லோர் இதயத்திலும் செந்தமிழ் - சைவ மணம் திகழ்த்துகின்றது.

விரோதி ஞூ 1888 - 89

சபையின் நூருவது
100 ஆவது ஆண்டு
சாதனம்

விபவ ஆண்டு 1988 -- 89

**நூல்வளத்தால் மேல்** *1 ம் பக்க வளர்ச்சி*

கட்டி எழுப்புவோம் கலைக்களஞ்சியத்தை, ஐய வருக, அம்மையே வருக, அண்ணே வருக, அருமைத்தம்பியே வருக! தருக தட்டித்தவறியுள்ள நூல்களை! அருகில் போகாது நூலகம் அமைப்போம். ஆற்றலுடன் கடமையைச் சுமப்போம்!

இந்துசாதனம் இந்த இறைபணியில், ஏட்டின் நூற்ருண்டு நிகழ்ச்சியின் மாட்டு எழுந்திருக்கின்றது.

அல்லல் என்செயும். அருவினையென்செயும் வல்லவன் கைக்குப் புல்லும் ஆயுதமன்றே!

வரட்டும் நூல்கள் திரள்திரளாக, வரலாறென்றை வகுப்போம் அருள் உருவாக.

பூகோளத்தில் ஒரு நறும்பூ ஈழம். இங்கு வாழும் எம் இனிய அன்பர்களே.

கைதந்து நூலறிவுக் காப்புறுதி செய்யுங்கள்.

★ தேயிலை கோப்பி நோய் எழு வாய்ப்பு ★

## இலிங்கமே எல்லாம் .........

2 ம் பக்கத்து வளர்ச்சி

இசைந்து எல்ல மந்திரங்கட்கும் மூலகாரணமாகி ஜீவ மந்திரமாக விளங்குகின்றது. இதனுள் எல்லா உலகங்களிலுமுள்ள சராசரப் பிரபஞ்சங்கள் அடங்கிக் கிடக்கின்றன. ஆதலால் பிரணவ வடிவினரே சிவலிங்கப் பெருமானாகவும் அப்பெருமானே விநாயகப் பெருமானாகவும் விளங்குகின்றார்.

இலிங்க நற்பீடம்
இசையுமோங்காரம்
இலிங்க நற்கண்ட
நிறையும் மகாரம்
இலிங்கத்துள் வட்ட
நிறையும் உகாரம்
இலிங்க மகார
நிறை விந்து நாதமே.

என்றார் திருமூலப் பெருமானார்.

ஆதியாகிய சிவலிங்க மூர்த்தியை வணங்கினவர் தானவர், மானுடர் எல்லோரும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நியமங்களைக் கொண்டு பூசித்து சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய பதங்களை அடைந்தார்கள். என்று சைவ சரித்திரங்கள் எடுத்தியம்புகின்றன. ஆதலின் சிவலிங்க பூஜையானது; சன்மார்க்க சீலர்கள் திரிகரண சுத்தியோடு அறிவு மயமாகவும், அன்பு மயமாகவும், நிறைந்து கிடக்கின்ற அக்கடவுளை நான்கு பாதங்களைக் கொண்டு பூசித்து வாழ்வதற்கே ஆலயவழிபாடு என்னும் அருட் செல்வத்தை அண்ட பிண்டங்களில் அடக்கி வைத்துள்ளனர் சைவ நெறி நின்றோர் ஞானிகள்.

"ஆலயமே சாயம்
அறிவே சிவலிங்கம்
மாலயனுங் காணாத
வள்ளலுக்கு- சீர்மிகு
அன்பே அபிஷேகம்
அன்பேநைவேத்தியம்
அன்பே நல்லார்ச்சனை
யுமாம்"

என்றார் சிவஞான வள்ளலார்.

ஆகவே சிவமே இலிங்கமாம். இலிங்கமே சக்தியாம். எல்லாம் அதுவே என்பதை, மானுடராக்கை வடிவு சிவலிங்கம்.

மானுடராக்கை வடிவு
சிதம்பரம்
மானுடராக்கை வடிவு
சதாசிவம்
மானுடராக்கை வடிவு
திருக்கூத்தே.

என்ற மந்திரம் விளக்கும்.

எனவே உலகத் தோற்றத்தில் எங்கும் சிவசக்தி ஆதாரமாய் இருத்தல் போன்று, உலகின் காரணமாகத் தோன்றும் அந்தச் சிவசக்திக்கு ஊடுருவிக் கலந்து நிற்பது சிவமாதலின் அவ்வித திருவுருவின் தோற்றமே இலிங்காகாரம் எனக்கொள்ள வேண்டும். இக்கொள்கை மனித சரீரத்தையும், ஆன்மாவையும் பொருந்துள்ளதாகும். ஆன்மாவே அறிவாயும், அவ்வறிவே சிவலிங்கமாயும் அதன் அன்பே அபிஷேகமாயும் அர்ச்சனையாகவும் உரிமை கொண்டு பரவுவதாலே சிவபெருமான் ஆன்மாக்களோடு உறைந்திருக்கின்றார் என்பது வெள்ளிடை மலையாம்.

சிவனடியார்களின் பரிபக்குவ நிலையை அறிந்து, அப்பெருமான் காட்சி அளித்து, திருவிளையாடல் புரிந்த மகத்துவங்கள் புராண வடிவாக இவ்வுலகில் விளங்குகின்றன.

எவ்விதமாயினும் உலகம், வழிபாடு இயற்றுவதற்கு உரியதாகிய பரமேஸ்வரன் பரமேஸ்வரியினது, செம்மேனி காட்டும் இலிங்க உருவமாகும்.

இதனையே மணிவாசகப் பெருமான்

அது பழச்சுவையென
அமுதென அறிதற்
கரிதென எளிதென
அமரரும் அறியார்
இது அவன் திருவுரு
இவன் அவன் எனவே
எங்களை யாண்டு
கொண்டு இங்கெழுந்
தருளும்
மதவளர் பொழில்
திருவுத்தர கோச
மங்கையுள்ளாய் திருப்
பெருந்துறை மன்னு

என்பதைச் சைவ சமயிகள் சிந்திக்க வேண்டும். சிதையும் உள்ளங்களைச் சீர்படுத்த வேண்டும். என்பதே சைவசமயத்தின் உட்பொருளாம். எனவே சிவமாகிய பெருமானும், சத்தியாகிய செம்மேனியம்மாளும், சிவ உமையெனப் பேர்பட்டு ஒன்றாகிச் சிவமெனுநாமந் தமக்கேயுரிய செம்மேனியராய் அருள் புரிவது சைவசமயத்தின் பெரும்பேறல்லவா. ஆதலின் சிவமும், சக்தியும் சேர்ந்து தோன்று முருவமெலாம் அவர்மயமே. அதனையே "ஆதலின் நமதுசக்தி அறுமுகன் அவனும், யாமும் பேதமின்று" எனும் கந்தபுராணக் கூற்று எடுத்து உண்மைப்படுத்துகின்றது.

சிவமும், சக்தியும், முத்தொழில மூவரும் அண்ட சராசரங்களும் சர்வ அண்டங்களும், சர்வ மூர்த்தங்களும் அடங்கிய பெருவடிவே இலிங்க வடிவாகும். இலிங்கத்தை வழிபாடு செய்வது, எல்லாத் தெய்வங்களையும் வழிபடுதல் போலவாம். எல்லா உயிரினத்தும் அன்பு காட்டல் போலவாம் என்ப.

### மன்னவர்க்கு

1 ம் பக்கத்து வளர்ச்சி

உடம்பும் வடகயிலை மலை சேர்ந்தார் என்று திருத்தொண்டர் புராணம் விளக்குகின்றது.

கசடறக் கற்றுப்பின் பெற்ற அறிவுச் செறிவின் வழி வாழ்ந்தகணிவுயர் காரியார் சிவப் பேறுறுதல் தவத்தின் விரிவே. மறையாளர் திருக்கடவூர்

வந்துதித்து வண்டமிழின்
துறையான பயன்றெரிந்து
சொல் விளங்கிப் பொருள்
மறையக்
குறையாத தமிழ்க் கோவை
தம்பெயராற் குலவும் வகை
முறையாலே தொகுத்தமைத்து
மூவேந்தர் பாற் பயில்வார்
அங்கவர்தா மகிழும் வகை
யடுத்தவுரை நயமாக்கிக்
கொங்கலர்தார் மன்னவர் பாற்
பெற்றநிதிக் குவை கொண்டு
வெங்கணரா வொடு கிடந்து
விளங்கு மிளம் - பிறச்சென்னி
சங்கரனரினி தருமத் தானங்
கள் பலசமைத்தார்,
யாவர்க்கும் பயனளிக்கும்
இன்பமொழி பயணியம்பித்
தேவர்க்கு முதற்றேவர் சீரடி
யாரெல்லார்க்கும் மேவுற்ற
விருநிதிய மிகவளித்து விடை
யவர்தம் காவுற்று திருக்கயிலை
மறவாத கருத்தினராய்
ஏய்ந்தகடல் சூழுலகி
லெங்குந்த மிசை நிறுத்தி
ஆய்ந்தவுணர் விடையுரு
வன்பினரா யணிகங்கை
தோய்ந்த நெடுஞ் சடையார்த
மருள்பெற்ற தொடர்பினால்
வாய்ந்தமனம் போலுடம்பும்
வடகயிலை மலை சேர்ந்தார்.
திருநாள் மாசி பூராடம்
விபவ மாசி 20 - வெள்ளி
3 - 3 - 8..

## புதியன புகுதலும் பழையன கழிதலும்
## பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 1989
## பேராளர் பெறு பேறு

### யாழ்ப்பாண மாவட்டம்

சுயேட்சைக்குழு (ஈரோஸ்)

திரு. இளையதம்பி இரத்தினசபாபதி
திரு. இளையதம்பி பரராசசிங்கம்
திரு. சின்னத்தம்பி சிவமகாராசா
திரு. அருணாசலம் பொன்னையா - செல்லையா
திரு. தம்பு லோகநாதபிள்ளை
திரு. செபஸ்தியாம்பிள்ளை எட்வேட்
திரு. கணபதி செல்வநாயகம்
திரு. ஜே. ஜீ. இராசேந்திரம்

ஈ. பி. ஆர். எல். எவ்.

திரு. கந்தையா நவரத்தினம்
திரு. கந்தையா பிரேமச்சந்திரன்
திரு. கணேசசங்கரி யோகசங்கரி

### வன்னி மாவட்டம்

ஈ. பி. ஆர். எல். எவ்.

திரு. அந்தோனி இம்மானுவெல் சில்வா
திரு. இராஜா குகனேஸ்வரன்

சுயேச்சைக்குழு ஈரோஸ்)

திரு. இன்னாசிமுத்து அல்பிறட்

ஐ. தே. க

திரு. இராசமனோகரி புலேந்திரன்

இலங்கை சுதந்திரக்கட்சி

திரு. எஸ். எஸ். எம் அபூபக்கர்

### மட்டக்களப்பு மாவட்டம்

தமிழர் விடுதலைக் கூட்டணி

திரு. கோவிந்தன் கருணாகரன் ரெலோ
திரு. பிறின்ஸ் காசிநாதர்
திரு. ரீ. சாமுவேல் தவராசா

சுயேச்சைக்குழு

திரு. அழகுப்போடி குணசீலன்

இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்

திரு. ஆலிம் முகம்மது ஹிஸ்புல்லா

### திருமலை மாவட்டம்

ஐ. தே. க.

திரு. எம். ஏ. எச் மகரூப்

எஸ். எல். எவ். பி.

திரு. எம். கே. ஏ. டி எஸ்- குணவர்த்தன

சுயேச்சைக்குழு

திரு. எஸ். இரத்தினராசா
திரு. கோ. மாதவராசா

| | | |
|---|---|---|
| ஐக்கியதேசியக்கட்சி | 110+15 | 125 |
| சுதந்திரக் கட்சி | 58+9 | 67 |
| மக்கள் ஐக்கிய முன்னணி | 2+1 | 3 |
| ஐக்கிய சோசலிச முன்னணி | 2+1 | 3 |
| முஸ்லிம் காங்கிரஸ் | 3+1 | 4 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி. | 9+10 | 4 |
| சுயேட்சைக் குழு (ஈரோஸ்) | 12+1 | 13 |

### வடக்குக் கிழக்கு மாவட்டம் பாராளுமன்ற உறுப்பினர் ஆசனங்கள்

| | | |
|---|---|---|
| யாழ் மாவட்டம்- | சுயேச்சைக்குழு | 8 |
| | (த. வி. கூ.) | 3 |
| வன்னிமாவட்டம் - | த. வி. கூ. | 2 |
| | சுயேச்சைக் குழு | 1 |
| | ஐ. தே. க. | 1 |
| | இ. மு. கா. | 1 |
| மட்டு. மாவட்டம் - | த. வி. கூ. | 3 |
| | சுயேச்சை | 1 |
| | இ. மு. கா. | 1 |
| திருமலை மாவட்டம்- | சுயேச்சை | 2 |
| | சுதந்திரக்கட்சி | 1 |
| | ஐ. தே. க. | 1 |
| அம்பாறை மாவட்டம் - | ஸ்ரீல சு. கா. | 1 |
| | த. வி. கூ. | 1 |
| | இ. முஸ்காங். | 1 |
| | ஐ. தே. க. | 3 |

### அம்பாறை

ரெலோ.

திரு. ஜெ. திவ்வியநாதன்

ஐ. தே. க

திரு. பி. தயாரத்தின
திரு. ஏ. பி. ஜி. சந்திரதாஸ்
திரு. நிகால் ஜசேந்திர பக்மீவெவ

இலங்கை முஸ்லீம் காங்கிரஸ்

திரு. எம். எச். எம். அஷ்றப்

இலங்கை சு. கட்சி

திரு. தே. ஆ. க. தேவப்பெரும

### தேசியப் பட்டியல் :

1. தமிழர் விடுதலைக் கூட்டணி நியமன உறுப்பினர்
2. சுயேச்சைக்குழு நியமன உறுப்பினர்
3. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நியமன உறுப்பினர்

## சிவதீட்சை பெற்றுவிட்டீர்களா?

இந்தக் கேள்வியை அன்று கேட்டவர் நாவலர் பெருமான் அக்தரபர் பக்தவராய் சொக்கநாதர் பெற்றே நூறாண்டுகளுக்கு மேலாயின.

அன்னார் நன்றுமந்தில் அயரா அன்புடைய அடியார்கள் ஆரம்பித்த சைவபரிபாலன சபையும் நூறாண்டுகள் கண்டு விட்டது.

இன்றும் இச் சபையும் அதே கேள்வியை அன்பர்களிடம் கேட்கின்றது என்ன?

சமயதீட்சை, சிவதீட்சை பெற்று விட்டீர்களா? இல்லையேல் இந்துசாதன நூற்றாண்டில்.

இந்தப் பேற்றினைப் பெறலாமே.

பெற்றும் பெரும் பேறடையலாமே அடியார்களே.

உங்கள் விருப்பத்தை எமக்கு அறிவியுங்கள். இந்துசாதன இதழை எடுத்து வாசியுங்கள்.

ஒரு ரூபா ஒரு இதழ்

எங்குமில்லாதவாறு இலேசான கிரயம் இது

★ சத்துணவருந்திடின் மெய்த்தகை விரிந்திடும் ★

# Hindu Organ

FEBRUARY (24. 02. 1989)

## Caring for our cattle- Culture based conduct

The common man has a humble companion. It may be a cow, a calf or any other domestic animal. Feeding cattle is not a friendly act but a paramount duty for the house - holder.

The home- stead in the good, but forgotten days, in our land was a humble home for domestic cattle. The farmer- husband had his favourites, the sturdy oxen that serve the master and share the plough, while the housewife tendered the cows and the goats.

But what enlivens the household is the supply of milk that gives every member of the family, the nutrition needed for healthy growth.

How very generous are these cattle that faithfully serve their master, the farmer, giving him every assistance in the bringing up of the family.

The fields where the bulls brave weather and storm and enable the master plough the tracts in time for the rains to fall, are the cradle of this cattle- culture.


And how indebted is man to this merciful animal.

Can any one imagine that this pet would ever be sold to the brutish butcher.

And will any housewife part with her cow even when it has lost its fertility, if it is to be thrown into the hoary hands of the cruel slaughterer.

The dung that this kind cow gives is the base for that wonderful powdery residue after combustion, so very tiou sly venerated by the Hindus as heavenly bliss.

Our culure cannot, therefore, pemit us to condone the slaughter of cattle, certainly not, butchery of beasts of burden.



### திருக்கோணேசுவரர் பதிகம்

திருச்சிற்றம்பலம்

நிரைகழல் அரவம் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

குற்றமில் லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையி ரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவர்க் கருளும்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே.

திருச்சிற்றம்பலம்

### ஞானவைரவர்கோவில்

1 ம் பக்கத்து வளர்ச்சி

களின் பேராதரவில் உண்டு.

இச்சிட்டு கும்பாபிஷேகத் தினத்தன்று மாலை நாலுமணிக்கு நிகழும் என்று செயலாளர் திரு. சி. டிங்கலாலா அறிவிக்கின்றனர்.

சைவபரிபாலன சபையாரால் நிறுவப்பட்ட இந்தக்கலைக்கழகம் 1960 ம் ஆண்டு அரசினராற் பொறுப்பேற்கப்பட்டது. இச் சபையின் இரு கண்கள், இந்துசாதனம் ஒன்று, இரண்டாவது இந்த இந்துக்கல்லூரி.

### வழிகாட்டிச் சைவநெறி

1 ம் பக்க வளர்ச்சி

தொடர்ந்து பண்ணிசை செய்சனர். அகில இலங்கைத் திருமுறை மன்றம் சைவ அபிவிருத்திக் கழகப் நாயன்மார்கட்டு நாவலர் தர்ம பாதுகாப்புச் சபை சார்பில் திரு. சா. இரகுநாதன், திரு. சி. கிருஷ்ணமூர்த்தி, திரு வ. கந்தசாமி (ஆசிரியர்) ஆகியோர் தலைமையிலே திருமுறைப் பாராயண நிகழ்ச்சி இடம் பெற்றது.

### நூறுண்டுநிறைவுவேளை நாலுநப் பெறட்டும்

சைவப் புலவர் க. சிற்றம்பலம் அவர்கள், இந்தப் புண்ணியநாச்சி தருமத்தைச் சபைநெறிப்படுத்த வந்த வரலாற்றினைக் கூறி அந்த அம்மையாரின் அருந்தொண்டு அருகிப்போகாது காப்பாற்றிய சைவ பரிபாலனம் இப்பொழுது நூற்றாண்டுப் பேர் பெற்று விளங்கும் வேளையிலே நாச்சியாரின் பெயரால் அந்த அடியாரின் சரித்திரத்தை வெளிபிடுவது பொருத்தமாகும் என்று கூறினர்.

சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள் நன்றி நவின்றனர்.

### கோடை காலமும் குளிர் பானமும்

தண்ணீர் அடிக்கடி உட்கொண்டு தாகம் தணிக்க வேண்டிய கோடைக் கொடுமை.

வேறு பானங்களை உட்கொள்ளும் பழக்கம் கொண்ட இந்நாட்டு மக்கள் இப்பொழுது அவ்வித பானங்களுக்கு அடாத கிரயம் கொடாது தாகம் தீர்க்க முடியாது.

இந்தப் புட்டிப்பானங்ளோ பல்வேறு இரசாயனப் பொருள் கலந்த மருந்துக் கலவை போல, தித்திப்புடன் எந்தவித நீராளுலும்சரி பரிசோதிக்காது சேர்த்து கவர்ச்சிக்கு வெவ்வேறு நிறங்களைக் கூட்டி ஒரு கலகலப்பான கலவை.

பானம் அருந்தியவருக்கிருந்த தாகத்தைவிட அருவருப்பு மிக வேகமாகத் தாக்கும் நிலையுண்டாகும்.

சுத்தமான மோர் என்றால் அத்தனையும் கலப்பு.

ஆகத்தப்பியிருக்கும் பானம் இளநீர். ஆனல் அதற்கும் விலை அகோரம்.

இப் பத்திரிகை யாழ்ப்பணம் சைவபரிபாலன சபையாரால் யாழ்ப்பாணம்காங்கேசன்துறை வீதி, 450 - ஆம் இலக்கத்திலுள்ள சபையாரது சைவப்பிரகாச அச்சகத்தில் 1989 ஆம் ஆண்டு மாசி ( 24 -02-1989 ) அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

தொலைபேசி: 22356.

ஆசிரியர் ; நம. சிவப்பிரகாசம்

பரமபதி துணை.

### தேசிகர் காட்டிய தெய்வ நெறி

வித்துவான் க. சொக்கலிங்கம் ( சொக்கன் )
( தலைவர், அ. இ. திருமுறை மன்றம், சை. அ. வி. கழகம், நா)

சிங்கமெனக் கர்ச்சிக்கும் செழுங்குரலில் தெய்வஞ்சார் சிறப்பு யாவும்
அங்கமெலாம் குழைந்துருக அடியவருக் கெடுத்துரைத்தே அவர்கள் வாழ்வின்
பங்கமெலாம் நீக்கியருட் பணிசெய்ய நெறிகாட்டும் பக்தி வாணன்
எங்களது தவப்பயனும் நமசிவா யப்பெரியோன் இறைதாள் உற்ருன். (1)

நல்லூரின் தேரடியிற் சற்சங்கம் கூட்டியதில் நாளும் நல்லோர்
சில்லோரே யாயினுந்தம் சிறுமைதரும் பவம்போக்கச் சேவை செய்தான்
கல்லூரும் கடுமனம் கசிந்துருக மணிவாசகத்தை முற்ருய்
நல்லாக ஓதற்கும் வழிசமைத்த தேசிகமாமணியி ழந்தோம். (2)

சிவம்பொலியுந் திருநீறு மேனியெலாம் சிறப்பாகத் திகழப் பூசி
அவம்பெருக்கும் வெறுவாழ்வை அகற்றியரன் நினைவொன்றே அகத்திற் சேர்த்துத்
தவம்சேரும் முனியெனவே தராதலத்தில் நிலைபெற்றுத் தருக்கி அச்சம்
எவர்க்குமிலா திறைவற்கே அஞ்சியவன் வாழ்ந்திட்டான் ஏதம் இல்லான். (3)

சிவயோக சுவாமியினைச் சிந்தையிலே நிலைநிறுத்திச் சேர்ந்தோர்க் கெல்லாம்
அவர்வழியே கடைப்பிடிக்க அறிவுரைகள் பலபகர்ந்த அன்புச் செல்வன்
உவமையிலாத் துங்கமனத் துயர்ந்தசீர் மிகவுடைய உண்மை யாளன்
எவருமழப் புவிநீங்கிச் சென்றிட்டான் உள்ளத்தில் இருப்பான் நன்கே. (4)

### சிந்தனையைத் திகழவைக்கும் சிவ செய்திகள்

| | |
|---|---|
| அமெரிக்க ஐக்கியநாடுகள் | அங்கு 553000 இந்துக்கள் இருக்கின்ர்கள் இது கட்டுக் கதையல்ல, வெளி வந்த புள்ளி விபரங்கள். |
| இங்கிலாந்து தேசத்தில் | இந்து சமயம் சொந்தம் கொண்டாடுவோர் எண் தொகை பத்து இலட்சம் |
| கனேடா உகண்டத்தில் | 53000 இந்துக்கள் |
| தென் ஆபிரிக்க தேசத்தில் | ஐந்து இலட்சத்துக்கும் மேல் |
| மலேசியாவில் | பத்து இலட்சம் |
| மோறிசுசுத்தீவில் | இந்துக்கள் ஆட்சி இங்கே 446700 |
| சிங்கப்பூரிலே | 139000 இந்துசமயச் செல்வாக்கு |
| இந்துநேசியாவில் | இருபத்தேழரை இலட்சம் இந்துக்கள் |
| பாகிஸ்தானில் | பத்துலட்சம் |
| வங்களாதேசில் | நூற்றேழு இலட்சம் |
| நேபாளத்தில் (இந்துமன்னர்) | நூற்றிருபத்தேழு இலட்சம் |
| நெதர்லண்டில் | 125000 |
| பிருதீவு | 259700 |
| ஆப்கானிஸ்தான் | 132000 |
| கெனியா | 137000 |

இற்றினிடாட்டில் இரண்டரை இலட்சம்
எங்கெங்கெலாம் எல்லாம் எங்கள்
இந்துக்கள் இருக்கின்ருர்கள்.

★ காலையிற் கதிரொளி சாலவுஞ் சுகவழி ★